**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திருமதி.R.L.பிரியதர்ஷினி, B.A., B.L..,**

2வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)

திருநெல்வேலி

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 08 ம் நாள் திங்கள்கிழமை

**<u>இ.ம.எண்.3/2025 அதன் அ.வ.எண்.491/2023</u>**

**<u>மற்றும்</u>**

**<u>இ.ம.எண்.4/2025 அதன் அ.வ.எண்.491/2023</u>**

**<u>மற்றும்</u>**

**<u>இ.ம.எண்.5/2025 அதன் அ.வ.எண்.491/2023</u>**

முத்துக்குமார் ... மனுதாரர் / வாதி

–எதிர்–

1) முப்பிடாதி

2) முத்துமாரி ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுக்கள் என் முன்பாக 20.12.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.வெங்கடேஸ்வரமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினர்களாக உள்ள நிலையிலும், மனுதாரர் தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**<u>பொதுவான உத்தரவு</u>**

1) இ.ம.எண்.3/2025 மனுவானது மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை அசல் வழக்கில் மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்வதற்கு அனுமதி அளித்து உத்தரவிடக்கோரி, மனுதாரரால் கட்டளை 7, விதி 14(3) சி.பி.சி ன் பிரகாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இ.ம.எண்.4/2025 மனுவானது, மனுதாரர் தரப்பு ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வா.சா.1ஐ திரும்ப அழைத்து உத்தரவிடக்கோரி, மனுதாரரால் கட்டளை 18, விதி 17 மற்றும் பிரிவு 151 சி.பி.சி ன் பிரகாரம் தாக்கல்

செய்யப்பட்டுள்ளது.

3) இ.ம.எண்.5/2025 மனுவானது, ஆவணங்களை குறியீடு செய்வதற்காக அசல் வழக்கினை மறுதிறப்பு செய்து உத்தரவிடக் கோரி, மனுதாரரால் பிரிவு 151 சி.பி.சி ன் பிரகாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) மனுதாரர் தரப்பில், அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அசல் வழக்கில் மனுதாரர் தரப்பு கட்சியை நிரூபிக்க தேவையாக முக்கிய ஆவணங்கள் என்றும், எனவே, எனவே, வாதி தரப்பு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள அசல் வழக்கினை மறுதிறப்பு செய்து, மனுதாரர் தரப்பு ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வா.சா.1 ஐ திரும்ப அழைத்து, மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை அசல் வழக்கில் மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்வதற்கு அனுமதி அழைத்து உத்தரவிடக் வேண்டுமென கட்சி செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தோன்றாத்தரப்பினர்களாக உள்ளார்கள்.

5) மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுக்களை அனுமதிப்பதினாலேயே, மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்றுக்கொண்டதாக கருத முடியாது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நிரூபிக்கும் பொறுப்பு மனுதாரரையே சார்ந்தது ஆகும். அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆவணங்கள் வா.சா.1 ன் நிரூபண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்யாமல் தற்போது தாக்கல் செய்யப்படும் கால தாமதத்தை மன்னிக்கும் பொருட்டே மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினர்களாக உள்ளார்கள். ஆவணங்களை காலதாமதமாக தாக்கல் செய்வதை மன்னிக்க கோரும் இம்மனுவில், மனுதாரர் தாக்கல் செய்ய வேண்டுமென கூறும் ஆவணங்களின் சாட்சியத்தன்மையை

ஆராய்வது ஏற்புடையதாக இருக்காது. இவ்வழக்கிற்கு மேற்படி ஆவணங்கள் அவசியமானதா இல்லையா என்பதை வழக்கின் இறுதி கட்டத்தில் தீர்மானித்துக் கொள்ளலாம் என்பதாலும், நீதியின்பால் நலன் கருதி இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, இம்மனுக்கள் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 08ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Uploaded on 09.12.2025
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2025.12.08 17:29:23 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
திருநெல்வேலி

<u>மனுதாரர் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்</u>- இல்லை
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்</u>- இல்லை

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Uploaded on 09.12.2025
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2025.12.08 17:29:30 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
திருநெல்வேலி

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**இ.ம.எண்.3/2025 மற்றும்**

**இ.ம.எண்.4/2025 மற்றும்**

**இ.ம.எண்.5/2025 அதன்**

**அ.வ.எண்.491/2023**

சீரான / வரைவு

பொதுவான உத்தரவு

08.12.2025